ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2121/31 - 2019 අප්‍රේල් මස 30 වැනි අඟහරුවාදා - 2019.04.30
*2121/31 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 30 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

***1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)***

*7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்*

எனது இல.: DST/LND/1/ACQ/55.
காணி அமைச்சின் குறிப்பு இல.: LD/5/2009/PC/196.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதனை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக் கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :**

தென் மாகாணம், அம்பாந்தோட்டை மாவட்டம், தங்கல்ல பிரதேச செயலாளர் பிரிவில், கதுருபொக்குண கிராம அலுவலர் பிரிவில், கதுருபொக்குண கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட 2018.06.26 ஆந் திகதிய இறுதி கிராம வரைபட இல. 311 இன் பிற்சேர்க்கை இல. 20, தாள் இல. 20 ஆம் இலக்க ஆரம்ப வரைபடத்தில் துண்டு இல. 474 எனக் காட்டப் பட்ட முகுணகஹவத்தை எனும் காணியில் காட்டப்பட்ட 0.0389 ஹெக்டயார் விஸ்தீரணமுடைய கீழ்விபரிக்கப்பட்ட காணித் துண்டு:

**துண்டு இல. 474**

காணியின் பெயர் : முகுணகஹவத்தை; விபரம் : வீட்டுத் தோட்டம், நிரந்தரக் கட்டிடமொன்று, கலப்பு பயிர்ச் செய்கை காணப்படுகின்றன; உரிமை கோருவோர் : குமாரசிங்க வன்னி ஆரச்சிகே வில்சன், 31/7, போதி மாவத்தை, தங்கல்ல; விஸ்தீரணம்: 0.0389 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2019 ஆம் ஆண்டு யூன் மாதம் 26 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு தங்கல்ல பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும், மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்ட ஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும் நஷ்ட ஈட்டுத் தொகைகளையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2019 ஆம் ஆண்டு யூன் மாதம் 19 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

பிரதேச செயலாளர்,
தங்கல்ல.

பிரதேச செயலகம்,
தங்கல்ல,
2019, ஏப்பிறல் 24.

5 - 254

1A - G 29965 - 27 (2019/04)
*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது குறிப்பு இல.: 8/3/5/3/10.
காணி அமைச்சின் குறிப்பு இல.: 4-3/9/2017/WS/313.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதனை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக் கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :**

மத்திய மாகாணத்தில், மாத்தளை மாவட்டத்தில், மாத்தளை பிரதேச செயலாளர் பிரிவில் கொஹொன்சிய பத்துவ சிறு பிரிவில் தியபுபுல பிரிவு, இல. 6, புகையிரத நிலைய பகுதி, மாத்தளை மாநகர சபை எல்லைக்குள் அமைந்துள்ள, நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட இல. பூ. வ. மா/1772 கொண்ட முதற்சுவட்டு வரைபடத்தில் துண்டு இல. 1 - 5, சுமார் 0.1409 ஹெக்டயார் மொத்த விஸ்தீரணம் கொண்ட காணித் துண்டுகளின் எல்லைகள் பின்வருமாறு :

1. **துண்டு இல. 1 - காணியின் பெயர் : வரிமதிப்பு இல. 25, நாகொல்ல வீதி; ஆரம்ப உரித்தாளரை தெரிந்துகொள்ள இயலவில்லை; விஸ்தீரணம் : 0.0018 ஹெக்டயார்**

வடக்கு : பூ. வ. மா. 1735 இல் துண்டு இல. 21, பூ. வ. 1127 இல் துண்டு இல. F54, இவ்வரைபடத்தில் துண்டு இல. 3; கிழக்கு : துண்டு இல. 3, 2; தெற்கு : துண்டு இல. 2, பூ. வ. 1127 இல் துண்டு இல. F54; மேற்கு : பூ. வ. 1735 இல் துண்டு இல. 22, 21.

2. **துண்டு இல. 2 - காணியின் பெயர் : வரிமதிப்பு இல. 25, நாகொல்ல வீதி; ஆரம்ப உரித்தாளரை தெரிந்துகொள்ள இயலவில்லை; பயனுறுபவர் : சிரபுதீன் ரபீனா உம்மா, பதுர்நிஸா ரபீக்; விஸ்தீரணம் : 0.1207 ஹெக்டயார்**

வடக்கு : பூ. வ. 1127 இல் துண்டு இல. F54, இவ்வரைபடத்தில் துண்டு இல. 3; கிழக்கு : துண்டு இல. 3, 4; தெற்கு : பூ. வ. 1841 இல் துண்டு இல. 5916, பூ. வ. 1127 இல் துண்டு இல. F54; மேற்கு : பூ. வ. 1127 இல் துண்டு இல. F54, இவ்வரைபடத்தில் துண்டு இல. 1.

3. **துண்டு இல. 3 - காணியின் பெயர் : வரிமதிப்பு இல. 25, நாகொல்ல வீதி; ஆரம்ப உரித்தாளரை தெரிந்துகொள்ள இயலவில்லை; பயனுறுபவர் : சிரபுதீன் ரபீனா உம்மா, பதுர்நிஸா ரபீக்; விஸ்தீரணம் : 0.0062 ஹெக்டயார்**

வடக்கு : பூ. வ. 1127 இல் துண்டு இல. F54; கிழக்கு : பூ. வ. 4801 இல் துண்டு இல. 12918, இவ்வரைபடத்தில் துண்டு இல. 4, 5, 2; தெற்கு : துண்டு இல. 5, 2; மேற்கு : துண்டு இல. 2, 1, பூ. வ. 1127 இல் துண்டு இல. F54.

4. **துண்டு இல. 4 - காணியின் பெயர் : வரிமதிப்பு இல. 25, நாகொல்ல வீதி; சட்டவிரோதமாக பயனுறுபவர் : ரபீனா உம்மா, பதுர்நிஸா ரபீக்; விஸ்தீரணம் : 0.0006 ஹெக்டயார்**

வடக்கு : பூ. வ. 4801 இல் துண்டு இல. 12918; கிழக்கு : பூ. வ. 4801 இல் துண்டு இல. 12918, பூ. வ. 1841 இல் துண்டு இல. 5916, இவ்வரைபடத்தில் துண்டு இல. 5; தெற்கு : இவ்வரைபடத்தில் துண்டு இல. 5; மேற்கு : துண்டு இல. 5, 2, 3.

5. **துண்டு இல. 5 - காணியின் பெயர் : வரிமதிப்பு இல. 25, நாகொல்ல வீதி; சட்டவிரோதமாக பயனுறுபவர் : ரபீனா உம்மா, பதுர்நிஸா ரபீக்; விஸ்தீரணம் : 0.0116 ஹெக்டயார்**

வடக்கு : துண்டு இல. 2, 3, 4; கிழக்கு : துண்டு இல. 4, பூ. வ. 1841 இல் துண்டு இல. 5916; தெற்கு : பூ. வ. 1841 இல் துண்டு இல. 5916; மேற்கு : பூ. வ. 1127 இல் துண்டு இல. F54, துண்டு இல. 2.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2019 ஆம் ஆண்டு மே மாதம் 29 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு மாத்தளை பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும், மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்ட ஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும் நஷ்ட ஈட்டுத் தொகைகளையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2019 ஆம் ஆண்டு மே மாதம் 22 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் முப்பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

கே. பி. கே. எல். பி. மதுவந்தி,
பிரதேச செயலாளர்,
மாத்தளை.

பிரதேச செயலகம்,
மாத்தளை,
2019, ஏப்பிறல் 24.

5 - 255